கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களை அவரது இல்லத்தில் கழக தீர்மானக் குழுச் செயலாளரும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினருமான நா. கார்த்திக் தனது துணைவியாரும் கோவை மாநகராட்சி கிழக்கு மண்டலக் குழுத் தலைவருமான இலக்குமி இளஞ்செல்வி கார்த்திக்குடன் சென்று ஆகஸ்ட் 24–அன்று கோவையில் நடைபெறும் தமது புதல்வி ஐஸ்வர்யா மணவிழா வரவேற்பு அழைப்பிதழை வழங்கி வாழ்த்துப் பெற்றனர்.

தி.மு.க. தலைமை நிலையச் செயலாளர்

துறைமுகம் கே.காஜா இல்லத் திருமணம்!

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் தலைமையில் – தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெறுகிறது!

சென்னை, ஜூன் 29-

தஞ்சை மாவட்டம், திருபுவனம் ஹாஜி எம்.ஐ. சாதிக் பாஷா - ஹாஜிமா எஸ்.சைரா பானு ஆகியோரின் புதல்வர் எஸ். ஹனீப் கானுக்கும், கழக தலைமை நிலையச் செயலாளர் ஹாஜி துறைமுகம் கே.காஜா - ஹாஜிமா கே.காத்தூன் பீவி ஆகியோரின் பேத்தி - ஜனாப் எஸ்.முஹம்மது ரபீக் - ஜனாபா எம்.ஜமீல் பாத்திமா ஆகியோரின் புதல்வி ஹாஜிமா எம்.சமீனா சப்ரியத்துக்கும் மணவிழா 5.7.2026 - ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில்சென்னை திருவேற்காடு, ஜி.பி.என். பேலஸில் நடைபெறுகிறது.

இத்திருமணம் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் கழக இளைஞர் அணிச் செயலாளர் - தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் முன்னிலையில் நடைபெறுகிறது.

இத்திருமணத்தில் கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன், கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி., ஆர்க்காடு நா.வீராசாமி, கழக முதன்மைச் செயலாளர் கே.என்.நேரு எம்.எல்.ஏ., கழக துணைப் பொதுச் செயலாளர்கள் ஐ.பெரியசாமி எம்.எல்.ஏ., க.பொன்முடி, கனிமொழி கருணாநிதி எம்.பி., ஆ. இராசா எம்.பி., திருச்சி சிவா எம்.பி., அந்தியூர் ப.செல்வராஜ், மு.பெ.சாமிநாதன், கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி, கழக செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ். இளங்கோவன்,

அன்பகம் கலை, பூச்சி எஸ்.முருகன், எஸ்.ஆஸ்டின் எம்.எல்.ஏ., ப.தாயகம் கவி, ஆர்.பத்மநாபன், பொன் தனபால், அவிசேக் மீரான், செய்யது மீரான்,

கழக எம்.பி.க்கள் எஸ். ஜெகத்ரட்சகன், தயாநிதி மாறன், கலாநிதி வீராசாமி, பி.வில்சன், தமிழச்சி தங்க பாண்டியன், இரா.கிரிராஜன், அருண்நேரு, தங்க தமிழ்ச்செல்வன், டி.எம். செல்வகணபதி, எஸ்.ஆர். சிவலிங்கம், சு.கல்யாண சுந்தரம், கே.ஆர்.என். ராஜேஷ் குமார், டி.எம்.கதிர் ஆனந்த், கான்ஸ்டன்டைன் ரவீந்திரன், ச.முரசொலி, கே.இ.பிரகாஷ், த.செல்வம், எம்.எஸ்.தரணிவேந்தன், கணபதி பி.ராஜ்குமார், கே.ஈஸ்வரசாமி, ஆ.மணி, சி.என்.அண்ணாதுரை, தே.மலையரசன், ராணி ஸ்ரீகுமார், ராஜாத்தி (எ) சல்மா உள்ளிட்ட மாவட்டச் செயலாளர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், சிறுபான்மை நல உரிமை பிரிவு நிர்வாகிகள், மூத்த வழக்கறிஞர்கள், மேயர், துணை மேயர், மாநில நிர்வாகிகள் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

திருவள்ளூர் மத்திய மாவட்டச் செயலாளர் - முன்னாள் அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் நன்றி கூறுகிறார்.

முதல்வர் ஜோசப் விஜய் தூங்கிக் கொண்டிருக்கிறாரா?

லாட்டரி குடும்பம்தான் தமிழகத்தை ஆட்சி செய்கிறது!

முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் குற்றச்சாட்டு!

தூத்துக்குடி, ஜூன் 29-

தமிழ்நாட்டை லாட்டரி குடும்பம் தான் இயக்கி ஆட்சி நடத்துகிறது என்று அனிதா ராதாகிருஷ்ணன் குற்றம் சாட்டியுள்ளார். தூத்துக்குடியில் முன்னாள் அமைச்சர் அனிதா ராதாகிருஷ்ணன் எம்எல்ஏ நேற்று அளித்த பேட்டி: புதிய கட்சி ஆரம்பித்து ஆட்சிக்கு வந்தவர்கள், தங்களது கட்சியையே அதன் மாநில நிர்வாகி ஆதவ் அர்ஜுனா கைப்பற்றி விடுவாரோ என்ற பயத்தில் உள்ளனர்.

தற்போது தமிழகத்தில் எந்த ஒரு அறிக்கையும் ஆதவ் அர்ஜுனா பெயரில் தான் வருகிறது. தமிழ் நாட்டை ஒரு லாட்டரி சீட்டு குடும்பம் தான் பின் புலத்திலிருந்து இயக்கி ஆட்சி நடத்திக் கொண்டிருக்கிறது. இதனால் மீண்டும் தமிழகத்தில் லாட்டரி சீட்டு கலாசாரம் வந்துவிடுமோ என்ற அச்சம் பொது மக்கள் மத்தியில் எழுந்துள்ளது.

திமுக ஆட்சியில் சட்டம், ஒழுங்கு கெட்டுவிட்டது என்று தற்போதைய முதல்வர் ஜோசப் விஜய் முன்பு கூறினார். ஆனால், இப்போது கோவையில் சிறுமி கொடூரக் கொலை செய்யப்பட்டுள்ள சம்பவம், சென்னையில் நடக்கும் தொடர் குற்றங்கள் எனத் தமிழ்நாட்டின் ஒவ்வொரு பகுதியிலும் கொலை, கொள்ளை, கஞ்சா மற்றும் சட்டவிரோத லாட்டரி விற்பனை தங்கு தடையின்றி நடைபெறுகிறது. தமிழ்நாடு முதல்வர் தூங்கிக் கொண்டிருக்கிறாரா? என மக்கள் மன்றம் கேள்வி எழுப்புகிறது.

தவெகவின் சாதாரண நிர்வாகிகள் கூட ரேஷன் கடைகள் மற்றும் அரசு அலுவலகங்களுக்குள் புகுந்து சட்டவிரோதமாக ஆய்வு மேற்கொள்கிறார்கள். இதனைச் செய்யச் சொல்லி ஆதவ் அர்ஜுனா தான் உத்தரவிட்டிருப்பார் என்று தெரிகிறது. திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலில் ஆன்லைன் மூலமாக வழங்கப்படும் ரூ.100 தரிசன டிக்கெட்டுகளில் பல கோடி ரூபாய் மோசடிகள் நடைபெற்றுள்ளன.

இதில் தொடர்புடைய அனைத்து அரசு அதிகாரிகள் மீதும் புதிய அரசு உடனடியாக ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். என் மீதான சொத்து வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ஊடகங்களில் செய்திகள் வருவது போல, தற்போதைய சூழலில் அமலாக்கத்துறை எனக்கு எந்தவொரு புதிய விசாரணை நோட்டீசும் வழங்கவில்லை. எனக்கு எந்தவிதமான நெருக்கடியும் சட்டப்படியாகக் கொடுக்கப்படவில்லை.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தமிழக அரசுப் பள்ளி மாணவர்களுக்கு வழங்கப்படவுள்ள

புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகளில் சாதிச் சான்றிதழ்!

மாநிலம் முழுவதும் விவாதத்தையும், எதிர்ப்பையும் ஏற்படுத்தியுள்ளது

ஈரோடு, ஜூன் 29-

கோபிசெட்டிபாளையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய வருவாய்த் துறை அமைச்சர் கே.ஏ. செங்கோட்டையன், மாணவர்கள் ஆண்டுதோறும் வருமானம், இருப்பிடம் மற்றும் சாதிச் சான்றிதழ்களைப் பெற அலுவலகங்களுக்கு அலைவதைத் தவிர்க்கும் நோக்கில் புதிய ஸ்மார்ட் அடையாள அட்டைகள் வழங்கப்படவுள்ளதாக தெரிவித்தார். முதல்கட்டமாக 10 மற்றும் 12ஆம் வகுப்பு மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த அட்டைகளில் மாணவர்களின் தனிப்பட்ட விவரங்களுடன் சாதிச் சான்றிதழ் தொடர்பான தகவல்களும் டிஜிட்டல் முறையில் இணைக்கப்படவுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

இந்த அறிவிப்பு வெளியானதைத் தொடர்ந்து, கல்வியாளர்கள், சமூக ஆர்வலர்கள் மற்றும் பல்வேறு அரசியல் கட்சிகள் கவலை தெரிவித்துள்ளன. கல்வி உதவித்தொகை மற்றும் இடஒதுக்கீடு உள்ளிட்ட நலத்திட்டங்களுக்காக சாதி விவரங்கள் அரசின் தரவுத் தளங்களில் பராமரிக்கப்படுவது அவசியமாக இருந்தாலும், அவற்றை மாணவர் அடையாள அட்டைகளுடன் இணைப்பது சமூக ரீதியாக பாதிப்புகளை ஏற்படுத்தக்கூடும் என அவர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து கருத்து தெரிவித்த ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், "கல்விச் சலுகைகள் மற்றும் அரசு நலத்திட்டங்களுக்காக சாதி விவரங்கள் தேவைப்படலாம். ஆனால், அவற்றை மாணவர்களின் அடையாள அட்டையுடன் இணைப்பது தேவையற்ற சமூக அடையாளப்படுத்தலுக்கு வழிவகுக்கும். பள்ளிகள் சமத்துவத்தையும் ஒற்றுமையையும் கற்றுத்தரும் இடங்களாக இருக்க வேண்டும்" ஆனால் மாணவர்களிடையே பாகுபாடு, உளவியல் அழுத்தம் மற்றும் சமூகப் பிரிவினை உணர்வுகள் உருவாகும் அபாயம் இருப்பதாக கல்வியாளர்கள் எச்சரித்துள்ளனர். ஏற்கனவே பள்ளிகளில் சாதி அடையாளங்களை வெளிப்படுத்தும் நடைமுறைகளைத் தவிர்க்க பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ள நிலையில், இந்த திட்டம் அதற்கு முரணானதாக அமையக்கூடும் என்றும் அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

நீதியரசர் சந்துரு குழுவின் பரிந்துரைகள், பள்ளி மற்றும் கல்வி நிறுவனங்களில் சாதி அடையாளங்களை குறைக்கும் நோக்கத்தைக் கொண்டிருந்ததாகவும், தற்போதைய திட்டம் அந்த நோக்கத்துடன் பொருந்துகிறதா என்பது குறித்து அரசு விளக்கம் அளிக்க வேண்டும் என்றும் சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதற்கிடையில், திட்டத்தின் முழுமையான வழிகாட்டு நெறிமுறைகள் இன்னும் வெளியிடப்படாத நிலையில், அடையாள அட்டைகளில் சாதி விவரங்கள் எவ்வாறு இடம்பெறும் என்பது குறித்தும் பல்வேறு கேள்விகள் எழுந்துள்ளன.

நிர்வாக வசதிக்காக மாணவர் தகவல்களை டிஜிட்டல் முறையில் ஒருங்கிணைப்பதில் தவறில்லை என்றாலும், சமூக நல்லிணக்கத்தை பாதிக்காத வகையில் திட்டத்தை செயல்படுத்த அரசு மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்பதே கல்வியாளர்கள் மற்றும் சமூக அமைப்புகளின் கோரிக்கையாக உள்ளது என கூறினார்.

பொய்யிலே பிறந்து... பொய்யிலே வளர்ந்து...

எல்லோரையும் விலைக்கு வாங்கலாம் என த.வெ.கவின் அதிகார போதைக்கும் எதை வேண்டுமானாலும் விற்கலாம் எனும் வைகோவின் பேராசைக்கும்முதன்முதலாகஒருஅடிவிழுந்திருக்கிறது. த.வெ.ககுதிரைபேரத்தில்ஈடுபடுகிறதுஎனஎதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் பகிரங்கமாக குற்றம்சாட்டியபோது, 'அய்யோநாங்களாநாங்கள்தூய சக்திஆயிற்றே'என்றெல்லாம்நாடகம்ஆடியவர்களுக்கு வைகோ ஒரு முடிவுரை எழுதியிருக்கிறார்.

' உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட்டு வென்ற இரண்டு ம.தி.மு.க எம்.எல்.ஏக்களையும் ராஜினாமா செய்து அழைத்து வாருங்கள் நான் அவர்களுக்காக இடைத்தேர்தலில் பிரச்சாரம் செய்கிறேன்' என்று முதல்வர் விஜய் சொன்னதை பகிரங்கமாக வெளிப்படுத்தியிருக்கிறார். எதிர்க்கட்சி எம்.எல்.ஏக்களை ராஜினாமா செய்ய வைத்து தன்பக்கம் இழுக்கும் குதிரைபேர யுத்தியின்நாயகனானஅமித்ஷாகூடஇவ்வளவுதுணிச்சலாக தன்னைவெளிப்படுத்திக்கொண்டதில்லை. குதிரைபேர அரசியலின் நாயகனாக த.வெ.க தலைவர் திகழ்கிறார் என்பதை தனது வாக்குமூலத்தின் மூலம் பிரகடனப்படுத்தியிருக்கிறார் வைகோ.

ஆனால் இந்த வெட்கக்கேட்டை மறைக்க அவர் முன் வைக்கும் வாதம் என்ன தெரியுமா? "எங்கள் கட்சி எம்.எல்.ஏக்களை ராஜினாமா செய்யவிடாமல் தி.மு.க தடுக்கிறது. அதில் ஒரு சட்டமன்ற உறுப்பினர் ம.தி.மு.கவிலிருந்து விலகி தி.மு.கவில் சேர்ந்துவிட்டார். இன்னொரு சட்டமன்ற உறுப்பினர் ம.தி.மு.கவில் தொடர்ந்தாலும் எம்.எல்.ஏபதவியைராஜினாமாசெய்யமறுத்துவிட்டார். இதுமட்டும்குதிரைபேரம்இல்லையா" என்றுகேட்கிறார். இதைவிட கேவலமான ஒரு வாதம் இருக்கமுடியுமா?

ஒரு கூட்டணியில் ஒரு கட்சி வேட்பாளர் அந்த கூட்டணியின் முதன்மை கட்சி சின்னத்தில் போட்டியிட்டு வென்ற பிறகு கூட்டணியை முறிப்பது மட்டுமல்ல அந்த எம்.எல்.ஏக்களையும் ராஜினாமா செய்யச்சொல்லி நிர்ப்பந்திப்பதுபச்சையான வெளிப்படையானகுதிரை பேரம். மேலும் சட்டப்படியேஒருவர் இன்னொருகட்சி சின்னத்தில்நின்றுபோட்டியிடும்போது தனது கட்சியின் அடிப்படை உறுப்பினர் பதவியையேராஜினாமாசெய்துவிட்டுதான்போட்டியிடுகிறார். அந்தவகையில் சட்டப்படி அந்த இரண்டு உறுப்பினர்களும் ம.தி.மு.க உறுப்பினர்களே கிடையாது. முக்கியமாக வைகோவிற்கு அவர்களை விற்பதற்கான உரிமை கிடையாது. அவர்கள் முழுக்க முழுக்க தி.மு.க சின்னத்தில் போட்டியிட்டு தி.மு.க வாக்குகளை பெற்று சட்டமன்றம்சென்றவர்கள். அவர்களைராஜினாமாசெய்யச்சொல்லி நிர்பந்திப்பதும் அந்த காலியிடங்களை த.வெ.கவிற்கு தாரைவார்க்க திட்டமிடுவதும், அவர்களை த.வெ.கவிடம்கொண்டுபோய்ஒப்படைக்கமுயற்சிப்பதும் அரசியல் கீழ்மையின் உச்சகட்டம். அந்த இரண்டு ம.தி.மு.கசட்டமன்றஉறுப்பினர்களில்ஒருவர்வைகோவின் இந்த கீழ்மையை எதிர்த்து தி.மு.கவில் தன்னை இணைத்துக்கொண்டார். இன்னொருவர்தான்ம.தி.மு.கவில் இருந்தாலும் சட்டமன்ற உறுப்பினர் பதவியை ராஜினாமாசெய்யமுடியாதுஎன்றுகூறிவிட்டார். இரண்டு பேருக்காகவும் த.வெ.கவிடம் பேரம்பேசிவிட்டுவந்த வைகோவிற்கு இப்போது என்ன செய்வதென்று தெரியவில்லை.

வைகோ இந்த கூட்டணி முறிவிற்கு முன்வைக்கும் காரணங்களிலாவதுஏதேனும்நாணயம்இருக்கிறதா? அவர் சொல்லும் முதலாவது காரணம் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடச் சொல்லி தி.மு.க நெருக்கடி கொடுத்ததாம். ம.தி.மு.கவிற்குகுறைந்தபட்சவாக்குவங்கிகூட இல்லை என்பதை தெரிந்துதான் தி.மு.க உதயசூரியன் சின்னத்தில் போட்டியிட வைகோவைக் கேட்டுக் கொண்டது. அதிலும் ஒரு தொகுதியில் ம.தி.மு.க சின்னத்திலேயேபோட்டியிடலாம்என்றுசொன்னபோது கூட, 'இல்லைநாங்கள்உதயசூரியன்சின்னத்திலேயே போட்டியிடுகிறோம் ' என்று சொன்னவர் வைகோ. இப்போது நரம்பில்லாத நாக்கு மாற்றிப் பேசுகிறது.

மேலும்இடதுசாரிகளும்வி.சி.கவும்முஸ்லீம்லீக்கும் அவரவர் சின்னத்தில் போட்டியிட தி.மு.க இணங்கிய போதும்ம.தி.மு.கவைமட்டும்கட்டாயப்படுத்தஎன்னஅவசியம் இருக்கிறது. அப்படியே கட்டாயபடுத்தியிருந்தால் கூட்டணியை விட்டு போவதில் அவருக்கு என்ன தடை இருந்தது? அப்போதும் யாராவது வருவார்களா என த.வெ.க கதவை திறந்துவைத்துதான் காத்துக்கொண்டிருந்தது.

வைகோவின்துயரம்என்னவென்றால்த.வெ.கஅதிக இடங்களைப் பெற்று அதேசமயம் பெரும்பான்மை இல்லாத சூழல் ஏற்படும் என்று அவர் கற்பனைகூட செய்யவில்லை. தி.மு.க கூட்டணி கட்சிகள் ஒவ்வொன்றாக த.வெ.க பக்கம் போனதும் தனக்கும் விழவேண்டிய 'லாட்டரி'ஒருநம்பரில்தவறியதுபோலவைகோமனமுடைந்துவிட்டார். காரணம் தன் கட்சியை சேர்ந்தவர்கள் உதயசூரியன் சின்னத்தில் வென்றதால் அவர்களைக் கூட்டிக்கொண்டு கிளம்ப கட்சித்தாவல் தடைச்சட்டம் பெரும் தடையாக மாறிவிட்டது. ஒரு விதத்தில் த.வெ.க அமைச்சரவையில்இடம்பெற்றகட்சிகளைப்பார்த்துகடும்பொறாமையால் ஏற்பட்ட ஒரு பதற்றம் எனலாம். அதுதான் தி.மு.க தன் கைகளைக் கட்டிப்போட்டுவிட்டது என்று கதறுகிறார். குதிரை பேரத்தில் ஈடுபட முடியாமல் வைகோ என்ற பொய்க்கால் குதிரையை லாயத்தில் கட்டியதால் தான் இவ்வளவு கோபம்.

அடுத்ததாகவைகோவின்இன்னொருபொய், தி.மு.க கூட்டணியில் எட்டு வருடங்களாக மனநெருக்கடியோடு இருந்தாராம். அந்த மனநெருக்கடியோடுதான் முதலில் தனக்கும் பிறகு தன் மகனுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைப் பெற்றுக்கொண்டாரா?

வைகோ தி.மு.கவிற்கு செய்த தொடர் துரோகங்களுக்காககலைஞரும் இன்றைய தி.மு.க தலைவரும் அவரைத் தொடர்ந்துமன்னித்தார்கள் என்பதுதான் உண்மை. வைகோ இதுவரை வகித்த நாடாளுமன்றஉறுப்பினர் பதவி அனைத்தும் தி.மு.கவின் கருணையால் பெற்றவை. தி.மு.கவை உடைத்து கட்சியை அழிக்க முயற்சித்தவரை. முன்னர் ஒருமுறைதி.மு.ககூட்டணிக்குத்துரோகம்செய்துஅ.தி.மு.ககூட்டணியில்அடைக்கலம்ஆனவரை. மக்கள்நல கூட்டணியை அமைத்து சொற்ப வாக்குகளில் 2016இல் தி.மு.கவை ஆட்சிக்கு வரவிடாமல் தடுத்தவரை பா.ஜ.கவிற்கு எதிரான ஒரு மதசார்பற்ற வலிமையான கூட்டணியை அமைக்கவேண்டும் என்பதற்காகவே தி.மு.க, ம.தி.மு.கவை கூட்டணியில் இணைத்துக் கொண்டது. ஆனால்2016தேர்தலின்போதுகலைஞரை சாதிப்பெயரை சொல்லி இழிவுபடுத்திய வைகோவை எந்த தி.மு.க தொண்டனும் இன்றுவரை மன்னிக்கத் தயாராக இல்லை.

வைகோ சொல்லும் இரண்டாவது காரணம் தி.மு.க அ.தி.மு.ககூட்டணிஅமைக்கமுயற்சித்தாகவும்பா.ஜ.க அ.தி.மு.க கூட்டணியில் இருப்பதால் அது மதசார்பின்மைக்கு இழைத்த துரோகம் என்றும் பேசுகிறார். நடக்கவேநடக்காதஒன்றைநடந்ததாககூறிதனதுஇழிசெயலுக்கு நியாயம் தேடுகிறார். பா.ஜ.வோடு தமிழ்நாட்டில் கூட்டணி அமைத்து மோடியை 'வெண்தாடி பெரியார்' என வியந்தோதிய வெட்கம்கெட்ட வாய்தான் வைகோவுடையது. இவர்தான் இப்போது பாஜகவை பற்றிப் பேசுகிறார்.

வைகோ தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க என எல்லோருடமும்மாறிமாறிகூட்டணிவைக்கலாம். ஆனால்தி.மு.க – அ.தி.முக கூட்டணி என்று ஒரு வதந்தி பரப்பினாலே பொங்கிஎழுந்துவிடுவாராம். சோறு கண்ட இடம் சொர்க்கம் என்பதை மறைக்க எத்தனை நாடகம்.

வைகோஇப்போதுஆடிக்கொண்டிருக்கும்இந்தபசப்பு நாடகம் அவரது அரசியல் வாழ்வின் இறுதி அத்தியாயத்தை எழுதிக் கொண்டிருக்கிறது.

மனுஷ்ய புத்திரன்

மாநில ஆலோசகர், தி.மு.க தகவல் தொழில்நுட்ப அணி

போதைப் பொருள் பயன்படுத்திய த.வெ.க. அமைச்சரைக் கண்டித்து

சென்னை மாவட்ட தி.மு.க. மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்!

சென்னை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா. அருண்குமார் அறிக்கை!

சென்னை, ஜூன்.29-

கழகத் தலைவர் அவர்களின் ஆணைக்கிணங்கவும், இளம் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின்படியும், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா. சுப்பிரமணியன் ஆலோசனைப்படியும், தமிழக வெற்றிக் கழக அரசின் மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சரான டி.சரத்குமார் பொது இடத்தில் போதைப் பொருள் பயன்படுத்துவது போல் வீடியோ வெளியிட்டதைக் கண்டித்து பதவி நீக்கக்கோரி இன்று (29.06.2026 - திங்கட்கிழமை) காலை 9.00 மணிக்கு எழும்பூர் ராஜரத்தினம் மைதானத்தில் ஒருங்கிணைந்த சென்னை மாவட்டம் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

சென்னை தெற்கு மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக நிர்வாகிகள் மற்றும் அனைத்து மாணவர் அணி நிர்வாகிகள், மாணவர்கள் தவறாமல் பெருந்திரளாக கலந்து கொண்டு ஆர்ப்பாட்டத்தை வெற்றியடையச் செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு சென்னை தெற்கு மாவட்ட மாணவரணி அமைப்பாளர் பா. அருண்குமார் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் – கழக மாணவர் அணி சார்பில் – சென்னையில்

போதைப்பொருள் பயன்படுத்திய அமைச்சரைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்!

திருவொற்றியூர் கிழக்குப் பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. அறிக்கை!

சென்னை, ஜூன் 29-

திருவொற்றியூர் கிழக்குப் பகுதி செயலாளர் 1-வது மண்டலக் குழு தலைவர் தி.மு.தனியரசு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை வடகிழக்கு மாவட்டம் மாணவர் அணி சார்பில் போதை பொருள் பயன்படுத்திய த.வெ.க.அமைச்சரை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் இன்று (29.6.2026) காலை 10 மணிக்கு ராஜரத்தினம் ஸ்டேடியம் எழும்பூரில் வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் அவர்களின் தலைமையில் முன்னாள் திருவொற்றியூர் சட்டமன்ற உறுப்பினர் கே.பி.சங்கர் முன்னிலையில் த.வெ.க. அரசை கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

ஆகையால் திருவொற்றியூர் கிழக்குப் பகுதிக்கு உட்பட்ட மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், பொதுகுழு உறுப்பினர்கள், பகுதி நிர்வாகிகள், வட்ட செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், மாவட்ட, பகுதி, வட்ட அணியின் நிர்வாகிகள் கலந்து கொள்ளும் படி கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு பகுதிக் கழகச் செயலாளர் தி.மு.தனியரசு எம்.சி. கேட்டுக் கொண்டுள்ளார்.